ஏறியிருப்பதாக அமைச்சர் அவர்கள் கருதுகிறார். ஏறிய விலை இன்னும் அதிகமாக ஏறிக்கொண்டே இருக்கிறதென்பது அவருக்குத் தெரியுமா? ஏதோ கொஞ்சம் கோதுமை, மைலோ வந்தது என்றால் விலை இறங்கிவிடுமா? இப்போது படி அரிசி 3½ ரூபாய்க்கு திருத்தணியில் விற்பது ஐயா அவர்களுக்குத் தெரியுமா? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, திருத்தணியில் படி அரிசி 3½ ரூபாய்க்கு விற்கிறது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அரசாங்க அதிகாரிகளிடமிருந்து எங்களுக்கு வருகின்ற தகவல்களை வைத்துக்கொண்டு தான் நாங்கள் சொல்ல வேண்டும். செங்கற்பட்டு மாவட்டம் உபரி மாவட்டமாகும். இப்பொழுது பருவமழை இல்லாததால் சரியான அறுவடை இல்லை. இதனால் விலை சற்று ஏறியிருக்கிறது. அதற்காகத்தான் குடும்பக் கார்டு வழங்கப்பட்டிருக்கிறது.

பழநி நகரில் டோப்பா தொழிற்சாலை

* 35 வினா.—**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பழநி நகரில் டோப்பா தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, டோப்பா தொழிற்சாலை எந்த அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது? (விடை இல்லை)

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள உய்யக்கொண்டான் கால்வாய்

* 27 வினா.—**திரு. வை. சுவாமிநாதன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள உய்யக்கொண்டான் பாசனக் கால்வாயைத் திருத்தியமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம் ஐயா பரிசீலனையில் இருக்கிறது.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போதிலிருந்து தொடங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, தலைமைப் பொறியாளர்களின் குறிப்பு கிடைத்த பிறகுதான், வேலை தொடங்கப்படும்.

1969 ஆகஸ்ட் 19]

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, உய்ய கொண்டான் ஆற்றில் கழிவுநீர் ஓடுவதுபற்றி அமைச்சர் அவர்களுக்கு ஏதேனும் குறிப்பு வந்ததா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தனிக் கேள்வி போடவும்.

மேல் பெரியாறு அணை

* 28 வினு.—**திரு. எஸ். அக்னிராஜு:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் பெரியாறு அணைக்கட்டின் மேற்கே மேல் பெரியாறு அணை அமைக்கும் திட்டம் ஏதாவது அரசின் பரிசிலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்த அளவில் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் பெரியாறு, வைகை அணை தவிர, வேறு அணை கட்ட அரசாங்கத்திடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா ? சில மாதங்களுக்கு முன்னர் அமைச்சர் அவர்கள் சென்று பார்த்து வந்தார்கள். அதைப்பற்றிய விவரம் தெரிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதைப்பற்றிய குறிப்பு ஒன்றும் தற்போது என்னிடம் இல்லை.

கோவிலார்-பெரியாறு அணை

* 36 வினு.—**திரு. எம். சுரேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் ஜில்லாவில் கோவிலார்-பெரியாறு (பிளவக்கல்) அணைக்கட்டு திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(இ) இதற்காகும் செலவுகளுக்கு மதிப்பிடப்பட்டு திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கிறதா ?

(உ) இது எப்பொழுது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) ஆம்.

(உ) இத்திட்டத்திற்கு தொழில் நுட்ப வகையில் ஒப்புதல் அளிக்கும்படி மத்திய நீர்பாசன மின்சார ஆணைக்குழுவுக்கு எழுதப்பட்டுள்ளது.